நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்
முன்னிலை – திரு.T. அருண்குமார் –II., M.A.,B.SC.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.3 நாகர்கோவில்.
2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை

**Crl.M.P.No. 1080/2026**

ஜெயராபர்ட்,
த/பெ. செல்வன் ... மனுதாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர்
சுசீந்திரம் காவல் நிலையம்
குற்ற எண்.448/2025 ... எதிர்மனுதாரர்

இம்மனு 01.06.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.நாகராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் அவர்களும், ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவிற்காக இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

1. இந்த மனுவானது இந்த வழக்கில் ஆஜர் செய்யப்பட்டுள்ள Bharat Benz TN 75 AZ 2287 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை இடைக்காலமாக திரும்ப கோரி மனுதாரர் மனு தாக்கல் செ ய்துள்ளார்.

2. மனுதாரரின் Bharat Benz TN 75 AZ 2287 வாகனம் 10.11.2025 ம் தேதி அதிகாலை 2.00 மணிக்கு சுசீந்திரம் காவல் ஆய்வாளர் ரோந்து செய்து வரும் போது சேதுபதியூர் என்ற இடத்தில் செம்மண் திருடுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் போலிஸ் ரெய்டு செய்ததில் Bharat Benz TN 75 AZ 2287 என்ற எண் கொண்ட கனரக வாகனம் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி வாகனம் மழை மற்றும் வெயிலில் இருப்பதால் வாகனத்தின் முக்கிய பாகங்கள் காணாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படும் எனவும், இதனால் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும், வழக்கு முடியும் வரை

வாகனத்தில் எந்தவிதமான மாறுதலும் செய்ய மாட்டேன் எனவும், Bharat Benz TN 75 AZ 2287 வாகனத்தை விலைக்கு கொடுக்கவோ, அடமானமோ எந்தவிதமான மாறுதலோ செய்யமாட்டேன் எனவும், வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் கோரும் நிபந்தனைகளுக்கு கட்டுபடுவேன் எனவும், எனவே வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

3. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. மனுதாரரிடம் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்தால் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்து விடுவார் என்றும், உருமாற்றம் செய்து விற்பனை செய்து விடவும் வாய்ப்பு உண்டு என்றும் எனவே மனுதாரருக்கு இதில் கண்ட வழக்கு சொத்தை கொடுக்க ஆட்சேபனை செய்யப்பட்டது.

4. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிவு சான்றிதழை கவனத்தில் கொள்ளும்போது மனுதாரர் தான் வாகனத்தின் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது "**மாண்புமிகு உயர்நீதிமன்றம் titus S/o. Muthu Nadar vs State of Tamilnade Rep. The Inspector of Police Aralvoimozhi Police Station Crl.R.C.(MD)1364/2025, dated 22.01.2026** தேதியிட்ட உத்தரவினை கவனத்தில் கொண்டும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **Crl.OP.;No.646/2024 dated 29.01.2024 Annadurai Vs Inspector of Police, Kurisliapet Police Station Thirupathur District** என்ற வழக்கில் பாரா எண்.30 ல் கூறியுள்ள காரணிகளை கவனத்தில் கொண்டும் **மனுதாரார் தானும் தனக்காக ஒரு நபரும் ரூ.10,00.000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) பிணைமுறியை எழுதி கொடுக்கும் பட்சத்திலும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன்** இடைக்காலமாக ஒப்படைக்க அனுமதிக்கப்பபடுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் மேற்படி வாகனத்தின் உருவத்தையோ, அமைப்பையோ மாற்றக்கூடாது. மனுதாரர் வாகனத்தை அடமானம் வைக்கவோ கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரார் தனது மனுவில் கோரியவாறு வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை Mahaveer Finance India Ltd., ல் வைப்பீடு செய்துள்ளதால் அந்த அசல் பதிவு சான்றிதழை வங்கியின் கடன் முடிந்த பிறகு வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. .

3. மனுதாரர் மேற்படி வாகனத்தின் போட்டோ மற்றும் சிடி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

4. போட்டோ மற்றும் சிடிக்கான பிரிவு 63 BSA ன் சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும்.

5. வழக்கு விசாரணையின் போதும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரசுக்கு ஆதாயம் செய்ய கோரிய மனுவில் இந்நீதிமன்றம் வாகனத்தை ஆஜர் செய்ய கோரும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாக Affidavit தாக்கல் செய்ய வேண்டும்.

6. வழக்கு சொத்தை வழக்கின் விசாரணைக்கு வேண்டும் போது ஆஜர் செய்யப்பட வேண்டும். இதேபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

7. தலைமை எழுத்தர் பஞ்சநாமா தயார் செய்யவும், அதில் மனுதாரரும், தலைமை எழுத்தரும் கையொப்பம் செய்யவும் மற்றும் வாகனத்தின் புகைப்பட நகலையும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வாறாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு ஜுலை மாதம் 10ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–T. அருண்குமார்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண.3

நாகர்கோவில்.